2003 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

23-4-2003 நாளிட்ட 'இந்து' பத்திரிகையில்,

"Jayalalithaa taunts Marxists again"

என்ற தலைப்பின்கீழ், கீழ்க்கண்டவாறு உண்மைக்கு மாறாக திரித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது;

"...Stung by the Chief Minister's diatribe, the Marxist members..."

"...She said education alone would not make a man sane, as leaders like Dr. Ramadoss and Dr. Krishnasamy, were notorious for casteist fanaticism.."

அரசின் செல்வாக்கையும், புகழையும், எந்த அளவிலாவது குறைக்க வேண்டுமென்ற வகையில், ஒரு உள்நோக்கத்தோடு தரங்கெட்ட வார்த்தைகளால், அவை உரிமைகளைப் பாதிக்கின்றவகையில் வெளியிடுவது, அவை உரிமையைப் பாதிப்பதாக உள்ளது. எனவே. இந்த ஆதாரமற்ற, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை விமர்சனம் செய்திருப்பது, அவை நடவடிக்கைகளைத் துச்சமாக மதித்து, பேரவையின் இறையாண்மையைப் பாதிப்பதால், இதனைப் பேரவை விதி 226-ன்கீழ் ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

(ஆ) உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம், திரு. எஸ். ஆர். பி. அவர்கள் பேசிய வார்த்தைகளைத் தொடர்ந்து விவாதம் ஏற்பட்ட சூழ்நிலையில், நான் நீக்கியதை, அவைக் குறிப்பிலே மீண்டும் ஏற்றுகிறேன்.

ஜனநாயக அமைப்பில், சட்டமன்றத்திற்குள்ள மிக உயர்ந்த ஆளுகையையும், மாட்சிமையையும், இறையாண்மையும் காப்பாற்றுகின்ற பொறுப்பு எனக்கு உள்ளது. எனது நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், ஆதாரமற்ற, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், இங்கு ஒலி வாங்கியை இயக்குவதற்குக் காவல் துறையைச் சேர்ந்த உளவுத் துறையினர் இங்கு இருப்பதாக அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

பேரவையின் மரபுகளைப் பேணாமல், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தி, பேரவையின் உரிமைகளை மறுக்கின்ற வகையிலும், பேரவையின் கௌரவத்தைக்

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 23

குறைக்கும் வகையிலும், பேரவைக்கு மாசு கற்பிக்கும் வகையிலும், அவையின் நடவடிக்கைகளுக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலும் கூறியிருப்பது, அவையின் கண்ணியத்தைக் குறைப்பதாக அமைகிறது. இவர்களது செய்கையினால், சட்டமன்றம் அவதூறு கூற்றுகளுக்கு ஆளாக்கப்படும்போது, சட்டமன்றத்தின் உரிமைகள் பாதிக்கப்படுவது மட்டுமின்றி, ஜனநாயகத்திற்கு ஊறு விளைவிப்பதாகவும் அமைந்துவிடும்.

எனவே, இதனைப் பேரவை விதி 226-இன்கீழ் ஆய்ந்து அறிக்கை அளிக்க உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் மாநில நூலகக் குழுப் பேரவை உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு ஆறு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு நான்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு ஓர் உறுப்பினரையும், மாநில நூலகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம், 13-9-2004 வரையாகும்.

மாநில நூலகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம், 13-9-2004 வரையாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

நியமனத் தாள் வேண்டுவோர், சட்டமன்றப் பேரவைச் செயலகச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.